Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 30.10.2024 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

நாள் 30.10.2024 புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, குஜராத் மாநிலம் ஏக்தா நகரில் 280 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடக்கி வைத்தார்.

குரு பூஜை விழாவை ஒட்டி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு பிரதமர் திரு.நரேந்திர மோடி புகழாரம் சூட்டி உள்ளார்.

தீபாவளி மற்றும் சத் பூஜை போன்ற பண்டிகைகளை ஒட்டி, பயணிகளின் வசதிக்காக இந்தியன் ரயில்வே 7 ஆயிரம் சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

நாளை தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அமைச்சர்கள் மற்றும் தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

மோடி (8)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று மாலை, குஜராத் மாநிலம் ஏக்தா நகரில் 280 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடக்கி வைத்தார். குஜராத் மாநிலத்தில் சுற்றுலா மற்றும் நீடித்த உள்ளூர் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையிலும் இந்த திட்டங்கள் வடிவமைக்கப் பட்டுள்ளன. நாளை ஏக்தா நகரில், துணை மாவட்ட மருத்துவமனை, ஸ்மார்ட் பேருந்து நிலையம் உள்ளிட்ட புதிய திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி திறந்து வைக்கிறார். அதனைத் தொடர்ந்து, 653 குடிமைப் பணி பயிற்சி அதிகாரிகளிடையே அவர் உரையாற்ற உள்ளார்.

## மோடி – தேவர் (10)

குரு பூஜை விழாவை ஒட்டி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு பிரதமர் திரு.நரேந்திர மோடி புகழாரம் சூட்டி உள்ளார். அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் எண்ணற்ற மக்கள் அவரது எண்ணங்கள் மற்றும் போதனைகளில் இருந்து வலிமைப் பெறுகிறார்கள் என்று தெரிவித்துள்ளார். பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் வறுமை ஒழிப்பு, ஆன்மீகம், விவசாயிகளின் நலன் ஆகியவற்றில் கவனம் செலுத்தி சமுதாயத்தை மேம்படுத்துவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்க அரசு தொடர்ந்து பாடுபடும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

## சர்தார் வல்லப்பாய் படேல் (11)

இரும்பு மனிதர் என்று போற்றப்படும் சர்தார் வல்லப்பாய் படேலின் பிறந்த தினமான நாளை தேசிய ஒற்றுமை தினமாக கடைபிடிக்கப்படுகிறது. இதனையொட்டி, இன்று புதுடெல்லியில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தலைமையில் இணையமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் ஒற்றுமைதின உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். அதைத் தொடர்ந்து பேசிய பேசிய திரு. நட்டா, ஒரே பாரதம் – உன்னத பாரதம் என்ற முழக்கத்திற்கு அடித்தளம் இட்டவர் சர்தார் படேல் என்று புகழாரம்

சூட்டினார். நாடு சுதந்திரம் அடைந்து போது பிரிந்து கிடந்த அனைத்து சமஸ்தானங்களையும் ஒன்றிணைத்து இந்திய தேசமாக உருவாக்கிய பெருமை படேலையே சாரும் என்றார். முன்னேற்றப் பாதையில் நாடு செல்வதற்கு தேசிய அளவிலான ஒற்றுமை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ராஜ்நாத் சிங் (7)

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், 2 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று அருணாச்சலப் பிரதேசம் சென்றுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் அருணாச்சலப் பிரதேசத்தின், தவாங்கில், ஆயுதப்படை வீரர்களுடனான கலந்துரையாடலை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த பயணத்தின் போது முன்னாள் ராணுவ அதிகாரி மேஜர் ராலெங்னா நினைவு அருங்காட்சியகத்தை திரு. ராஜ்நாத் சிங் திறந்து வைக்கிறார்.

இந்தியன் ரயில்வே (18)

தீபாவளி மற்றும் சத் பூஜை போன்ற பண்டிகைகளை ஒட்டி, பயணிகளின் வசதிக்காக இந்தியன் ரயில்வே 7 ஆயிரம் சிறப்பு ரயில்களை இயக்குகிறது. கடந்த ஆண்டை விட 2 ஆயிரத்து 500 கூடுதல் ரயில்கள்

இயக்கப்படுகின்றன. இந்த சிறப்பு ரயில்களில் தினமும் 2 லட்சம் பேர் கூடுதலாக பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். பண்டிகைக் காலங்களில் அதிகமான பயணிகளின் எண்ணிக்கையை திறம்பட சமாளிக்கும் வகையில் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். நாடு முழுவதும் முக்கிய ரயில் நிலையங்களில் தானியங்கி பயணச் சீட்டு விற்பனை இயந்திரங்கள், உணவு, குடிநீர், மொபைல் கழிப்பறைகள் போன்றவை அதிக அளவில் அமைக்கப்பட்டுள்ளன. ரயில் நிலையங்களில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து வடக்கு ரயில்வேயின் மூத்த மக்கள் தொடர்பு அதிகாரி திரு. ஹிமான்ஷு சேகர் உபாத்யாய் கூறுகையில், ரயில் பயணங்களின் போது ஏற்படும் சிரமரங்களைத் தவிர்க்கவும், முன்பதிவு செய்யப்பட்ட மற்றும் முன் பதிவு செய்யப்படாத பயணிகளின் எளிதான பயணங்களுக்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், தற்பொழுது பாதுகாப்பு பணியில் கூடுதலாக 30 சதவிகித காவலர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய பேரிடர் மீட்புப் படை (12)

தேசிய பேரிடர் மீட்புப் படை கடந்த ஓராண்டில் தொள்ளாயிரத்துக்கும் மேற்பட்ட மீட்புப் பணிகளை மேற்கொண்டு, மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை காப்பாற்றி உள்ளதாக மத்திய உள்துறை செயலர் திரு. கோவிந்த்

மோகன் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற ஷாஹித் ஸ்மிருதி சமரோவை முன்னிட்டு, தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது அவர் இவ்வாறு கூறினார். மக்களின் நம்பிக்கையின் அடையாளமாக தேசிய பேரிடர் மீட்புப் படை உருவெடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். உத்தராகண்ட், கேரளா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் ஏற்பட்ட இயற்கை பேரிடரின்போது NDRF வீரர்கள் துணிச்சலுடன் களத்தில் இறங்கி மீட்புப் பணியில் ஈடுபட்டதை திரு. கோவிந்த் மோகன் குறிப்பிட்டுப் பேசினார். அத்தகைய வீரர்களின் துணிச்சலையும், அர்ப்பணிப்பையும் நாடு எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கும் என்றும் தெரிவித்தார்.

முருகன் - தீபாவளி (13)

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் மக்களுக்கு தீபாவளி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், தீபஒளி திருநாள் என்று அனைவராலும் அழைக்கப்படும் தீபாவளி பண்டிகை பாரத தேசம் மட்டும் அல்லாமல், உலகம் முழுவதும் வாழும் இந்தியர்களால் ஆண்டுதோறும் வெகு சிறப்பாக கொண்டாடப்படுவதாக தெரிவித்தார். இராம பிரான், இராவணனை அழித்து, தனது வனவாசத்தை முடித்து, அயோத்தி திரும்பிய நாளை தீபம் ஏற்றி தீபாவளி திருநாளாக மக்கள் கொண்டாடி மகிழ்வதாகவும்

அவர் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீகிருஷ்ணர் நரகாசுரனை அழித்து தர்மத்தை நிலைநாட்டியதை நினைவு படுத்தும் நாளாகவும் தீபாவளித் திருநாள் கொண்டாடப்படுகிறது என்றும் இந்நன்னாளில் அனைவரும் நல்ல உடல் நலத்தோடு வாழவும், வாழ்வில் இன்பம் பெருகவும், அனைவரது இல்லத்திலும் – உள்ளத்திலும் மகிழ்ச்சி பெருகட்டும் என்று, தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தீபாவளி -1(17)

நாளை தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அமைச்சர்கள் மற்றும் தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இந்திய மக்கள் அனைவருக்கும், குறிப்பாக புதுச்சேரி மாநிலத்தில் வாழும் சகோதர – சகோதரிகளுக்கு தனது மனமார்ந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள் என தெரிவித்துள்ளார். தீபாவளி பண்டிகை நாட்டு மக்களின் ஒற்றுமை உணர்வையும், சகோதர உணர்வையும் பலப்படுத்துகிறது என்றும், சாதி – மத பேதங்களை கடந்து அனைவரது வாழ்விலும் ஒளிமயமான எதிர்காலத்தையும், மகிழ்ச்சியையும் தீபாவளி பண்டிகை கொண்டுவர தாம் வாழ்த்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் திரு. ரங்கசாமி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தீபாவளி பண்டிகையின் போது, தீபாவளித் திருநாள் அனைவருடைய வாழ்விலும் எல்லா வளமும், நலமும், மகிழ்ச்சியும் கொண்டுவந்து சேர்க்கும் நல்ல தொடக்கமாக அமையட்டும் என்று வாழ்த்தி உள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், அமைச்சர்கள் திரு. நமச்சிவாயம், திரு. லட்சுமி நாராயணன், திரு. தேனி ஜெயகுமார், திரு. சாய் ஜெ சரவணன் குமார் ஆகியோரும் தீபாவளி வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

தீபாவளி -2 (6)

சட்டப்பேரவை எதிர்கட்சித் தலைவர் திரு. சிவா, புதுச்சேரி மாநில காங்கிரஸ் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற மக்களவை உறுப்பினருமான திரு. வைத்திலிங்கம், பிஜேபி புதுச்சேரி மாநிலத் தலைவரும், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான திரு. செல்வ கணபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் உள்ளிட்டோரும் மக்களுக்கு தீபாவளி வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

முத்து ராமலிங்கம் (14)

சுதந்திரப் போராட்ட வீரர் பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 116ஆவது பிறந்த நாள், குரு பூஜையாக இன்று கொண்டாடப்பட்டது. இதனையொட்டி, இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் உள்ள அவரது நினைவிடத்தில் தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது உரையாற்றிய அவர், முத்துராமலிங்க தேவர் எல்லா வகையிலும் சிறந்த போர் வீரர் என்றும், தமிழக அரசு அவரை கவுரவிக்கும் வகையில் நினைவுச் சின்னங்களை அமைத்துள்ளதாகவும் கூறினார். மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் பசும்பொன் முத்துராமலிங்க தேவருக்கு அஞ்சலி செலுத்தினார். சுதந்திரப் போராட்டத்தில் தியாகம் செய்த அவரது தைரியமான நிலைப்பாட்டிற்காக அவர் நினைவு கூறப்பட வேண்டும் என்று நாடும் – ஆன்மீகமும் ஒன்றே என முத்துராமலிங்க தேவர் எப்போதும் மேற்கோள் காட்டியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிச்சாமி, மதுரையில் உள்ள முத்து ராமலிங்க தேவர் கோவிலுக்குச் சென்று மரியாதை செலுத்தினார்.

வானிலை (7)

மன்னார் வளைகுடா மற்றும் தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்குச் சுழற்சிகள் காரணமாக கடலோர மற்றும்

உள் தமிழகப் பகுதிகளின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் அடுத்த 5 நாட்களுக்கு இடி – மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மீனவர்களுக்கான வானிலை முன்னெச்சரிக்கை ஏதுமில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, குஜராத் மாநிலம் ஏக்தா நகரில் 280 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடக்கி வைத்தார்.

குரு பூஜை விழாவை ஒட்டி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு பிரதமர் திரு.நரேந்திர மோடி புகழாரம் சூட்டி உள்ளார்.

தீபாவளி மற்றும் சத் பூஜை போன்ற பண்டிகைகளை ஒட்டி, பயணிகளின் வசதிக்காக இந்தியன் ரயில்வே 7 ஆயிரம் சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

நாளை தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அமைச்சர்கள் மற்றும் தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. BI / CN / RK